05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# LAPAN ASPEK MEYPPĀṬṬIYAL DALAM SAJAK MODEN AṞIVUMATHI

**SUGUNADEVI A/P VEERAN**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS**

**2021**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**LAPAN ASPEK MEYPPĀṬṬIYAL DALAM SAJAK MODEN AṞIVUMATHI**

**SUGUNADEVI A/P VEERAN**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**DISERTASI DIKEMUKAKAN BAGI MEMENUHI SYARAT UNTUK MEMPEROLEH IJAZAH SARJANA SASTERA (MOD PENYELIDIKAN)**

**FAKULTI BAHASA DAN KOMUNIKASI UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS**

**2021**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



UPSI/IPS-3/BO 32
Pind : 00 m/s: 1/1

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
SULTAN IDRIS EDUCATION UNIVERSITY

**Sila tanda (√)**

| | |
|---|---|
| Kertas Projek | |
| Sarjana Penyelidikan | √ |
| Sarjana Penyelidikan dan Kerja Kursus | |
| Doktor Falsafah | |

**INSTITUT PENGAJIAN SISWAZAH**
**PERAKUAN KEASLIAN PENULISAN**

Perakuan ini telah dibuat pada **07** (hari bulan) **SEPTEMBER** (bulan) **2021**

**i. Perakuan pelajar** :

Saya, **SUGUNADEVI A/P VEERAN, M20142002338, FAKULTI BAHASA DAN KOMUNIKASI** (SILA NYATAKAN NAMA PELAJAR, NO. MATRIK DAN FAKULTI) dengan ini mengaku bahawa disertasi/tesis yang bertajuk **LAPAN ASPEK MEYPPĀṬṬIYAL DALAM SAJAK MODEN AṞIVUMATHI** adalah hasil kerja saya sendiri. Saya tidak memplagiat dan apa-apa penggunaan mana-mana hasil kerja yang mengandungi hak cipta telah dilakukan secara urusan yang wajar dan bagi maksud yang dibenarkan dan apa-apa petikan, ekstrak, rujukan atau pengeluaran semula daripada atau kepada mana-mana hasil kerja yang mengandungi hak cipta telah dinyatakan dengan sejelasnya dan secukupnya.

Tandatangan pelajar

**ii. Perakuan Penyelia:**

Saya, **ILANGKUMARAN A/L SIVANADHAN** (NAMA PENYELIA) dengan ini mengesahkan bahawa hasil kerja pelajar yang bertajuk **LAPAN ASPEK MEYPPĀṬṬIYAL DALAM SAJAK MODEN AṞIVUMATHI** (TAJUK) dihasilkan oleh pelajar seperti nama di atas, dan telah diserahkan kepada Institut Pengajian Siswazah bagi memenuhi sebahagian/sepenuhnya syarat untuk memperoleh Ijazah **SARJANA SASTERA (MOD PENYELIDIKAN)** (SILA NYATAKAN NAMA IJAZAH).

**07.09.2021**

TARIKH

Tandatangan Penyelia

DR. ILANGKUMARAN SIVANADHAN
Senior Lecturer
Department of Modern Languages
Faculty of Languages and Communication
Sultan Idris Education University

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



UPSI/IPS-3/BO 31
Pind.: 01 m/s:1/1

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
SULTAN IDRIS EDUCATION UNIVERSITY

# INSTITUT PENGAJIAN SISWAZAH / *INSTITUTE OF GRADUATE STUDIES*

## BORANG PENGESAHAN PENYERAHAN TESIS/DISERTASI/LAPORAN KERTAS PROJEK
## *DECLARATION OF THESIS/DISSERTATION/PROJECT PAPER FORM*

Tajuk / *Title*: **LAPAN ASPEK MEYPPĀṬṬIYAL DALAM SAJAK MODEN ARIVUMATHI**

No. Matrik /*Matric's No.*: **M20142002338**

Saya / *I* : **SUGUNADEVI A/P VEERAN**
(Nama pelajar / *Student's Name*)

mengaku membenarkan Tesis/Disertasi/Laporan KertasProjek(Kedoktoran/**Sarjana)**** ini disimpan di Universiti Pendidikan Sultan Idris (Perpustakaan Tuanku Bainun) dengan syarat-syarat kegunaan seperti berikut:-
*acknowledged that Universiti Pendidikan Sultan Idris (Tuanku Bainun Library) reserves the right as follows:-*

1. Tesis/Disertasi/Laporan Kertas Projek ini adalah hak milik UPSI.
   *The thesis is the property of Universiti Pendidikan Sultan Idris*

2. Perpustakaan Tuanku Bainun dibenarkan membuat salinan untuk tujuan rujukan dan penyelidikan.
   *Tuanku Bainun Library has the right to make copies for the purpose of reference and research.*

3. Perpustakaan dibenarkan membuat salinan Tesis/Disertasi ini sebagai bahan pertukaran antara Institusi Pengajian Tinggi.
   *The Library has the right to make copies of the thesis for academic exchange.*

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4. Sila tandakan ( √ ) bagi pilihan kategori di bawah */ Please tick ( √ ) for category below:-*

| | | |
|---|---|---|
| [ ] | **SULIT/*CONFIDENTIAL*** | Mengandungi maklumat yang berdarjah keselamatan atau kepentingan Malaysia seperti yang termaktub dalam Akta Rahsia Rasmi 1972. / *Contains confidential information under the Official Secret Act 1972* |
| [ ] | **TERHAD/*RESTRICTED*** | Mengandungi maklumat terhad yang telah ditentukan oleh organisasi/badan di mana penyelidikan ini dijalankan. / *Contains restircted information as specified by the organization where research was done.* |
| [√] | **TIDAK TERHAD / *OPEN ACCESS*** | |

(Tandatangan Pelajar/ Signature)

Tarikh: **07.09.2021**

DR. ILANGKUMARAN SIVANADHAN
Senior Lecturer
Sultan Idris Education University

(Tandatangan Penyelia / *Signature of Supervisor*)
& (Nama & Cop Rasmi / *Name & Official Stamp*)

Catatan: Jika Tesis/Disertasi ini **SULIT @ TERHAD**, sila lampirkan surat daripada pihak berkuasa/organisasi berkenaan dengan menyatakan sekali sebab dan tempoh laporan ini perlu dikelaskan sebagai **SULIT** dan **TERHAD**.

*Notes: If the thesis is CONFIDENTAL or RESTRICTED, please attach with the letter from the organization with period and reasons for confidentiality or restriction.*

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# நன்றி மலர்கள்

தாய் தந்த தமிழுக்கும் தரணி போற்றும் தமிழுக்கும் எனது வணக்க மலர்களைச் சமர்ப்பிக்கிறேன். எனக்கு ஒருபோதும் சிரமம் பாராமல் உதவிய எனது பொறுப்புணர்ச்சிமிக்க நெறியாளர் முனைவர் ப.த.கிங்ஸ்டன் மற்றும் முனைவர் சி.இளங்குமரன் அவர்களுக்கும் இவ்வினிய பொழுதில் எனது மனமார்ந்த நன்றிகளைச் சமர்ப்பித்துக் கொள்கிறேன். சுவரை வைத்துதான் சித்திரம் வரைய முடியும் என்பதற்கேற்ப, எனது நெறியாளர் அவர்களின்களின் சரியான வழிக்காட்டலினாலும் தெளிவான விளக்கத்தினாலும்தான் என்னால் இவ்வாய்வினைச் சிறப்பாகச் செய்ய முடிந்தது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பத்து திங்கள் சுமையினைச் சுகமாக எண்ணி என்னை இத்தரணிக்குக் கொண்டு வந்து அன்பும் பண்பும் நிறைந்திட சிறப்பாக வளர்த்து, இந்நிலைக்கு ஆளாக்கிய எனது அன்பு பெற்றோர்கள் திரு.வீரன் மாரியாய்@சாரதா அவர்களுக்கும், என்றும் உறுதுணையாக என்னுடன் இருக்கும் எனது அன்பு கணவர் திரு.முருகன்@சங்கர் அவர்களுக்கும், எனது குழந்தைகள் செல்வன் மு.ரோஷன், செல்வன் மு.ரோஹிட் மற்றும் செல்வி மு.ஹர்ஷினி அவர்களுக்கும், இந்நாள் வரை என்னுள்ளிருந்து என்னை வழிநடத்திக் கொண்டிருக்கும் எனது இறைவனுக்கும் இந்த ஆய்வைச் சமர்ப்பணம் செய்கிறேன்.

**தமிழோடு பிறந்து, தமிழோடு வளர்ந்து,**
**தமிழாழே வாழ்ந்து, தமிழை வாழ வைப்பேன் என்றும்..**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



## ஆய்வின் சாரம்

இந்த ஆய்வு கவிஞர் அறிவுமதி கவிதைகளில் காணப்படும் மெய்ப்பாட்டுக் கூறுகளை அடையாளங்காணுதல், கவிதைகளில் வெளிப்படும் மெய்ப்பாட்டு உணர்வுகளுக்கான நிலைக்களன்களும் தொல்காப்பியர் கூறும் மெய்ப்பாட்டு நிலைக்களன்களும் கொண்டிருக்கும் ஒற்றுமையை ஆராய்தல் மற்றும் தொல்காப்பியரின் நிலைக்களன்களோடு மாறுபட்டிருக்கும் நிலைக்களன்களைக் நிறுவுதல் எனும் மூன்று நோக்கங்களைக் கொண்டுள்ளது. பகுப்பு முறை, விளக்க முறை, நூலாய்வு, மற்றும் மதிப்பீட்டு அணுகுமுறைகளைக் கொண்டு இந்த ஆய்வு ஆராயப்பட்டுள்ளது. 1977-ஆம் ஆண்டு முதல் 2015-ஆம் ஆண்டு வரை வெளிவந்த கவிஞர் அறிவுமதியின் 13 கவிதை நூல்களில் காணப்பட்ட 575 கவிதைகள் மெய்ப்பாட்டியல் கோட்பாட்டின்படி பகுத்தாராயப்பட்டன. ஆய்வின் இறுதியில், தொல்காப்பியரின் எண்வகை மெய்ப்பாட்டுக் கூறுகளும் காணப்பட்டாலும் அதன் 32 நிலைக்களன்களையும் முழுமையுமாக அறிவுமதியின் கவிதைகளில் காண முடியவில்லை என்று கண்டறியப்பட்டது. 'மருட்கை' மெய்ப்பாடு மிக பரவலாக அவரது 141 கவிதைகளில் கண்டறியப்பட்டது. மேலும், அறிவுமதியின் கவிதைகள் 'அச்சம்' மெய்ப்பாட்டை மிகக் குறைவாகவே பிரதிபலித்துள்ளன. 14 கவிதைகளில் மட்டுமே இம்மெய்ப்பாடு கையாளப்பட்டுள்ளது. கால மாற்றத்திற்கேற்றவாறும், கவிஞரின் வாழ்வியல் அனுபவங்களையும், அவரைச் சூழ்ந்த சமூகக் கிடப்புகளையும் முன்னிறுத்தியே இந்த மெய்ப்பாடுகள் இருந்தன என ஆய்வின் முடிவில் தெரிய வந்தது. சுருங்கக்கூறின் தற்கால இளைஞர்களின் உணர்வில் மெய்ப்பாட்டியல் கூறு காணப்படுகிறது. இவ்வாய்வானது, கவிஞர் அறிவுமதியின் கவிதை தொகுப்புகள் மனிதர்களின் மன உணர்வுகளைக் கண்டறிந்து சமுதாயத்தில் ஏற்படுகின்ற பல சிக்கல்களையும் இன்னல்களையும் களைய துணைபுரியும் என்பதை வலியுறுத்துகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# LAPAN ASPEK MEYPPĀṬṬIYAL DALAM SAJAK MODEN AṞIVUMATHI

## ABSTRAK

Kajian ini bertujuan untuk mengenal pasti unsur-unsur Meyppāṭṭiyal yang terdapat dalam puisi nukilan Arivumathi, mengkaji persamaan dan menilai perbezaan situasi Meyppāṭṭiyal yang terdapat dalam puisi dan teori Meyppāṭṭiyal (perasaan) yang diutarakan dalam karya Tholkaapiyam. Kajian ini dijalankan menggunakan kaedah kualitatif merangkumi analisis tekstual, dan kajian perpustakaan. Data yang diperoleh kemudiannya dianalisis menggunakan kuantitatif, kualitatif dan dijelaskan dengan menggunakan kaedah deduktif, induktif dan komparatif. Penjelasan diberikan berdasarkan teori Meyppāṭu yang diutarakan oleh Tholkappiyar. Sebanyak 575 buah puisi dari 13 buah buku sajak moden yang diterbitkan antara tahun 1977 hingga tahun 2015 telah digunakan sebagai sumber kajian. Dapatan kajian ini menunjukkan bahawa sajak moden Aṟivumathi mempunyai lapan aspek Meyppāṭu iaitu nakai (ketawa), alukai (tangisan), ilivaral (keaiban), marutkai (kekaguman), accam (ketakutan), perumitam (kebanggaan), vekuli (kemarahan) dan makilcchi (kegembiraan) seperti yang dinyatakan dalam Tholkaapiyam. Hasil kajian juga menunjukkan bahawa bukan semua situasi Meyppāṭu terdapat dalam sajak Arivumathi. Sebanyak 141 sajak mencerminkan aspek Marutkai. Manakala, hanya 14 sajak sahaja yang menyentuh aspek Accam. Dapatan kajian juga menunjukkan peredaran zaman, pengalaman penyajak dan situasi masyarakat sekeliling menyebabkan beberapa situasi Meyppāṭu yang diketengahkan oleh Tholkappiyar kurang relevan dan tidak seiring dengan situasi sajak moden Aṟivumathi. Kesimpulannya, kajian ini membuktikan naluri perasaan generasi pada zaman sekarang menampakkan aspek Meyppāṭu. Implikasi kajian ini menunjukkan aspek Meyppāṭu dapat digunakan dalam memahami psikologi manusia dan memberikan penyelesaian kepada sebarang masalah yang wujud dalam komuniti.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



**EIGHT ASPECTS OF MEYPPATTIYAL IN THE MODERN POEMS OF AṞIVUMATHI**

## ABSTRACT

This study aims to identify the Meyppāṭṭiyal elements found in Arivumathi's poems, examine the similarities and evaluate the differences of Meyppāṭṭiyal situations found in Arivumathi's poems and feelings articulated in Tholkaapiyam's work. The study was conducted using qualitative methods including textual analysis, and library research. The data obtained were then analyzed using quantitative, qualitative and explained using deductive, inductive and comparative methods. The explanation is given based on the theory of Meyppāṭu put forward by Tholkappiyar. A total of 575 poems from 13 books of modern poetry published between 1977 to 2015 were used as research sources. The findings of this study show that modern Aṟivumathi poetry has eight aspects of Meyppāṭu namely nakai (laughter), alukai (crying), ilivaral (shame), marutkai (admiration), accam (fear), perumitam (pride), vekuli (anger) and makilcchi (joy) as expressed in Tholkaapiyam. The results also show that not all Meyppāṭu situations are found in Arivumathi poems. A total of 141 poems reflect aspects of Marutkai. Meanwhile, only 14 poems touch on the Accam aspect. The findings of the study also show that the passage of time, the experience of the poet and the situation of the surrounding society caused some of the Meyppāṭu situations highlighted by Tholkappiyar to be less relevant and not in line with the situation of modern Aṟivumathi poetry. In conclusion, this study proves the instincts of the feelings of the present generation manifest the Meyppāṭu aspect. The implications of this study show that the Meyppāṭu aspect can be used in understanding human psychology and providing solutions to any problems that exist in the community.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| **ஒப்புதல்** | iii |
| **நன்றியுரை** | v |
| **ஆய்வின் சாரம்** | vi |
| ABSTRAK | vii |
| ABSTRACT | viii |
| **உள்ளடக்கம்** | ix |
| அட்டவணைப் பட்டியல் | ixv |
| குறிவரைவுப் பட்டியல் | xvi |
| **இயல் 1 அறிமுகம்** | |
| 1.1 முன்னுரை | 1 |
| 1.2 ஆய்வுப் பின்னணி | 3 |
| 1.3 ஆய்வுச் சிக்கல் | 6 |
| 1.4 ஆய்வு நோக்கம் | 9 |
| 1.5 ஆய்வு வினா | 10 |
| 1.6 ஆய்வு நன்மைகள் | 10 |
| 1.7 ஆய்வு எல்லை | 12 |
| 1.8 ஆய்வுச் சான்றாதாரம் | 13 |
| 1.9 கலைச்சொற்கள் | 14 |
| 1.9.1 கவிதை விளக்கம் | 14 |
| 1.9.2 மெய்ப்பாடு விளக்கம் | 16 |
| 1.10 தொகுப்புரை | 19 |
| **இயல் 2 முந்தைய ஆய்வுகள்** | |
| 2.1 முன்னுரை | 20 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



2.2 முந்தைய ஆய்வுகள் 21

2.3 தொகுப்புரை 37

**இயல் 3 ஆய்வு நெறிமுறை**

3.1 முன்னுரை 39

3.2 ஆய்வு வடிவமைப்பு 40

3.3 ஆய்வு அணுகுமுறை 41

3.4 ஆய்வுக் கட்டமைப்பு 44

3.5 ஆய்வுக் கருவி 45

3.6 தரவுச் சேகரிப்பு முறை 45

3.7 தரவுப் பகுப்பாய்வு முறை 47

3.8 ஆய்வுக் கோட்பாடு 48

3.9 கோட்பாடு கட்டமைப்பு 56

3.10 தொகுப்புரை 57

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**இயல் 4 ஆய்வு முடிவுகள்**

4.1 முன்னுரை 58

4.2 அறிவுமதி கவிதைகளில் எண்வகை மெய்ப்பாடும் அதன் நிலைக்களன்களும் 59

4.2.1 நகை 59

4.2.1.1 எள்ளல் 62

4.2.1.2 இளமை 65

4.2.1.3 பேதைமை 69

4.2.1.4 மடம் 74

4.2.2 அழுகை 77

4.2.2.1 இழிவு 79

4.2.2.2 இழவு 85

4.2.2.3 அசைவு 88

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



4.2.2.4 வறுமை 92

4.2.3 இளிவரல் 98

4.2.3.1 மூப்பு 100

4.2.3.2 பிணி 101

4.2.3.3 வருத்தம் 101

4.2.3.4 மென்மை 106

4.2.4 மருட்கை 110

4.2.4.1 புதுமை 112

4.2.4.2 பெருமை 117

4.2.4.3 சிறுமை 122

4.2.4.4 ஆக்கம் 127

4.2.5 அச்சம் 130

4.2.5.1 அணங்கு 133

4.2.5.2 விலங்கு 134

4.2.5.3 கள்வர் 134

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.2.5.4 இறை 134

4.2.6 பெருமிதம் 137

4.2.6.1 கல்வி 139

4.2.6.2 தறுகண் 141

4.2.6.3 இசைமை 147

4.2.6.4 கொடை 148

4.2.7 வெகுளி 148

4.2.7.1 உறுப்பறை 150

4.2.7.2 குடிகோள் 151

4.2.7.3 அலை 155

4.2.7.4 கொலை 159

4.2.8 உவகை 159

4.2.8.1 செல்வம் 161

4.2.8.2 புலன் 162

4.2.8.3 புணர்வு 162

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



4.2.8.4 விளையாட்டு 166

4.3 அறிவுமதி கவிதைகளில் தொல்காப்பியரின் மெய்ப்பாடுகளோடு மாறுபட்டிருக்கும் நிலைக்களன்கள் 167

4.3.1 அழுகை 167

4.3.1.1 காதல் பிரிவால் ஏற்படும் அழுகை 167

4.3.1.2 பிரிவால் ஏற்படும் அழுகை 169

4.3.2 இளிவரல் 171

4.3.2.1 பெண்களின் இயலாமை கண்டு ஏற்படும் இளிவரல் 171

4.3.2.2 ஏங்குதல் மூலம் ஏற்படும் இளிவரல் 174

4.3.2.3 மனித செயல் கண்டு ஏற்படும் இளிவரல் 176

4.3.3 அச்சம் 178

4.3.3.1 சாதி, சோதிடம் பற்றிய அச்சம் 178

4.3.3.2 ஆயுதம், போர், இரசாயணம் தொடர்பான அச்சம் 179

4.3.3.3 சக மனிதன் மீதான அச்சம் 183

4.3.3.4 அரசியல் மீதான அச்சம் 184

4.3.4 பெருமிதம் 184

4.3.4.1 நட்பினால் பெருமிதம் 185

4.3.4.2 வாழ்க்கை நிலை கண்டு பெருமிதம் 188

4.3.4.3 மனித செயல் கண்டு பெருமிதம் 190

4.3.4.4 ஆண்மை மீது மெருமிதம் 194

4.3.5 வெகுளி 196

4.3.5.1 உறவுகள் மீது ஏற்படும் வெகுளி 196

4.3.5.2 சமூக நிலையில் நடக்கும் அவலங்கள் கண்டு ஏற்படும் வெகுளி 200

1.3.5.3 எதிர்ப்பார்ப்புக் (காதல்) கைக்கூடாததால் ஏற்படும் வெகுளி 205

4.3.5.4 இயற்கை சேதம் மீது ஏற்படும் வெகுளி 206

4.4 தொகுப்புரை 210


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**இயல் 5 ஆய்வுக் கருத்தாடல்களும் முடிவுகளும்**


5.1 முன்னுரை 212

5.2 ஆய்வுச் சுருக்கம் 212

5.3 கண்டுபிடிப்புகளின் கருத்தாடல் 213

5.3.1 தொல்காப்பியரின் எண்வகை மெய்ப்பாட்டு நிலைக்களன்களோடு மாறுபட்டுள்ள அறிவுமதியின் கவிதைகளும் மெய்ப்பாட்டு நிலைக்களன்களும் 214

5.3.1.1 நகை மெய்ப்பாடும் அதன் நிலைக்களன்களும் 216

5.3.1.2 அழுகை மெய்ப்பாடும் அதன் நிலைக்களன்களும் 217

5.3.1.3 இளிவரல் மெய்ப்பாடும் அதன் நிலைக்களன்களும் 219

5.3.1.4 மருட்கை மெய்ப்பாடும் அதன் நிலைக்களன்களும் 220

5.3.1.5 அச்சம் மெய்ப்பாடும் அதன் நிலைக்களன்களும் 222

5.3.1.6 பெருமிதம் மெய்ப்பாடும் அதன் நிலைக்களன்களும் 223

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

5.3.1.7 வெகுளி மெய்ப்பாடும் அதன் நிலைக்களன்களும் 224

5.3.1.8 உவகை மெய்ப்பாடும் அதன் நிலைக்களன்களும் 225

5.4 ஒட்டுமொத்த ஆய்வு முடிவு 227

5.5 தொடர் ஆய்விற்கான பரிந்துரை 228

5.6 முடிவுரை 229

**மேற்கோள் மூலங்கள்** 230

**பின்னிணைப்பு** 235

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## அட்டவணைப் பட்டியல்

**அட்டவணை எண்** **பக்கம்**


1 கவிதை தொகுப்பு நூல்கள் 13

2 எண்வகை மெய்ப்பாடுகளும் அவற்றிற்குரிய நிலைக்களன்களும் 18

3 மெய்ப்பாடுகளும் அதன் நிலைக்களன்களும் 50

4.1 அறிவுமதி கவிதைகளில் நகை மெய்ப்பாடு 60

4.2 அறிவுமதி கவிதைகளில் நகை மெய்ப்பாடும் அதன் நிலைக்களன்களும் 61

4.3 அறிவுமதி கவிதைகளில் அழுகை மெய்ப்பாடு 78

4.4 அறிவுமதி கவிதைகளில் அழுகை மெய்ப்பாடும் அதன் நிலைக்களன்களும் 79

4.5 அறிவுமதி கவிதைகளில் இளிவரல் மெய்ப்பாடு 99

4.6 அறிவுமதி கவிதைகளில் இளிவரல் மெய்ப்பாடும் அதன் நிலைக்களன்களும் 100

4.7 அறிவுமதி கவிதைகளில் மருட்கை மெய்ப்பாடு 111

4.8 அறிவுமதி கவிதைகளில் மருட்கை மெய்ப்பாடும் அதன் நிலைக்களன்களும் 112

4.9 அறிவுமதி கவிதைகளில் அச்சம் மெய்ப்பாடு 131

4.10 அறிவுமதி கவிதைகளில் அச்சம் மெய்ப்பாடும் அதன் நிலைக்களன்களும் 133

4.11 அறிவுமதி கவிதைகளில் பெருமிதம் மெய்ப்பாடு 138

4.12 அறிவுமதி கவிதைகளில் பெருமிதம் மெய்ப்பாடும் அதன் நிலைக்களன்களும் 139

4.13 அறிவுமதி கவிதைகளில் வெகுளி மெய்ப்பாடு 149


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


4.14 அறிவுமதி கவிதைகளில் வெகுளி மெய்ப்பாடும் அதன் நிலைக்களன்களும் 150

4.15 அறிவுமதி கவிதைகளில் உவகை மெய்ப்பாடு 159

4.16 அறிவுமதி கவிதைகளில் உவகை மெய்ப்பாடும் அதன் நிலைக்களன்களும் 161

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# குறிவரைவுப் பட்டியல்


| குறிவரைவு எண் | **பக்கம்** |
|---|---|
| 3.1 ஆய்வுக் கட்டமைப்பு | 44 |
| 3.2 கோட்பாடு கட்டமைப்பு | 56 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# இயல் 1

## அறிமுகம்

### 1.1 முன்னுரை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அறிவைப் பெருக்க மனிதன் கண்டுபிடித்த கருவிகளுள் மொழி முதன்மையானது (சந்தியா, 2014). மொழி மக்களின் அறிவாற்றல் வளர்ச்சியால் மக்களின் கூட்டு வாழ்விற்கு இன்றியமையாததாகப் படைத்துக் கொள்ளப்பட்ட கருவியாகும் (இலக்குவனார். 2009). மொழி என்பது கருத்துப் பரிமாற்றத்துக்கு உரிய ஒரு கருவியாகும். கையசைவுகளாலும் முகக்குறிப்புகளாலும் தங்கள் எண்ணங்களையும் கருத்துகளையும் வெளிப்படுத்திக் கொண்டது மனித இனம் (கனகரத்தினம், 2014). சிறந்த எண்ணங்களைச் சிறந்த மொழியில் கூறுவது அல்லது எழுதுவதுதான் இலக்கியம். சிறந்த இலக்கியம் என்பது இலக்கை நோக்கி நம்மைக் கொண்டு செல்லும் ஆற்றல் கொண்டது (மனோன்மணி, 2015). மனிதர்களின் அனுபவங்களும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


எண்ணங்களும் சிறப்பாக வெளிப்படும் போது படைப்பிலக்கியங்கள் தோன்றுகின்றன (தேவகி, 2015). அறிந்த கருத்துகளையும், உணர்ந்த உணர்ச்சிகளையும் அளந்து உரைப்பதற்குப் பயன்படும் மொழியே கருவி. அம்மொழி பேசும் மக்களின் முடிந்த கொள்கைகளையும், முதிர்ந்த குறிக்கோள்களையும் தன்னகத்தே கொண்டு திகழும் இயல்புடையதுதான் இலக்கியம் (ஈஸ்வரன், 2014). கற்பனையை அறிவிற்குத் துணையாகக் கையாண்டு இன்பத்தை உண்மையோடு, இணைத்துக்கூறும் கலையே இலக்கியக்கலை (ஈஸ்வரன், 2014). இலக்கியம் மனித வாழ்க்கையை மையமாகக் கொண்டது.

மனிதனின் சிந்தனைக்கும் உணர்வுக்கும் கற்பனைக்கும் விருந்தாக அமைவது. கற்பவருடைய எண்ணத்தில் எழுச்சியையும் இதயத்தில் மலர்ச்சியையும் உண்டாக்கும் ஆற்றல் வாய்ந்தது. இன்புறுத்துவதோடு அறிவுறுத்தும் ஆற்றலும் உடையது இலக்கியம் (ஈஸ்வரன், 2014). தமிழ்மொழியில் அன்று தொட்டு இன்று வரை மிகுதியாகக் கவிதைகளே ஆளுமை செய்து வந்துள்ளன. ஆற்றல் வாய்ந்த நோக்குகளாலும் போக்குகளாலும், காலங்கள் மாறியது போலவே கவிதையின் பாடுபொருட்களும் அவற்றின் வடிவங்களும் மாறிமாறி வந்து கொண்டிருக்கின்றன. அதனைக் கற்றறிந்தோர் தெளிவாக உணர்வர். கவிதை என்பது தன்னிகரற்றது; படைப்பாளியையும் அப்படைப்பினைப் படிப்பவரையும் மகிழ்விக்கக் கூடியது. கவிஞன் நல்லுள்ளத்தால் தீட்டும் உயிரோவியமே கவிதையாகும் (சந்தியா, 2014).

ஆய்வாளர் கவிஞர் அறிவுமதி கவிதைகளை ஆய்வுக்களமாகக் கொண்டிருக்கிறார். இந்த ஆய்வானது, கவிஞர் அறிவுமதி அவர்களால் எழுதப்பட்ட கவிதைகளை உள்ளடக்கியுள்ளது. இக்கவிதைகளில் தொல்காப்பியர் வகுத்தளித்த

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



எண்வகை மெய்ப்பாட்டியல் கூறுகள் ஆய்வு செய்யப்பட்டன. 1977 முதல் 2015 வரையில் கவிஞர் அறிவுமதி அவர்கள் எழுதிய கவிதைகளை ஆய்வாளர் தேர்வு செய்தார்.

## 1.2 ஆய்வுப் பின்னணி

தொல்காப்பியம் ஒரு பழந்தமிழ்ப் பெருஞ்செல்வம். தமிழில் இன்றுள்ள நூல்களிலேயே இதுவே பழமையானது; முதன்மையானது (சாமி சிதம்பரனார், 2000). இன்று கிடைக்கின்ற இலக்கண நூல்களுள் காலத்தால் முற்பட்டது தொல்காப்பியம். எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று அதிகாரங்களைக் கொண்டு விளங்கும் இந்நூல் ஒன்பது இயல்களாகப் பகுக்கப்பெற்றுள்ளது. தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் உள்ள மெய்ப்பாட்டியலில் தற்போதைய அறிஞர்கள் வியக்குமாறு பல செய்திகள் உள்ளன (ஜெயஸ்ரீ, 2010). வாழ்க்கையைப் படம்பிடிப்பதே இலக்கியம் ஆகும். வாழ்க்கை என்பது பெரிதும் உள்ளத்தைச் சார்ந்து அமைகிறது. வாழ்வியல் தத்துவங்கள் அடிப்படையிலேயே இலக்கியங்கள் எழுகின்றன. இலக்கியத்தில் காணும் சிறந்த உணர்ச்சிகள் மக்களிடம் காணும் சீற்றம், பேராசை, பொறாமை போன்ற உணர்ச்சிகளைப் போக்கி, அவர்தம் உள்ளங்களைத் தூய்மை செய்யும் தன்மையுடையன (ஜெயஸ்ரீ, 2010). இலக்கியம் என்பது காலத்தைக் காட்டும் கண்ணாடி. சங்க கால இலக்கியம் முதல் தற்கால இலக்கியம் வரை மனிதனுக்கும் மனித வாழ்விற்கும் மிகவும் நெருங்கிய தொடர்புடையது. இலக்கியங்கள் மக்கள் வாழ்ந்த வாழ்க்கை நிலையைப் பிரதிபலிக்க கூடியது. மனித இனத்தின் அனுபவங்களைக் கலைநயத்தோடு எடுத்துரைப்பதே இலக்கியம் (ராஜம் ராஜேந்திரன், 2007).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


வாழ்க்கையில் மனிதர்கள் கண்டவை; அவர்கள் கண்டு அனுபவித்தவை; நம் எல்லோர்க்கும் உடனடியாகக் கவர்ச்சி ஊட்டுபவை; நன்று கவர்ச்சியூட்டுபவை எவையோ, அவற்றைக் குறித்து அவர்கள் சிந்தித்தவை; உணர்ந்தவை; இவை பற்றி அறிவிக்கும் உயிர்ப்பு மிக்க பதிவேடே இலக்கியமாகும். சுருங்கச் சொன்னால், வாழ்க்கை வெளியீடு (பாலச்சந்திரன், 2012). இலக்கியம் பல்வகைப்படும். அவற்றை இயல், இசை, நாடகம் எனப் பிரித்துப் பகுத்தனர். இலக்கியங்கள் மக்களுக்கு ஏதாவது ஒரு வகையில் கருத்துகளைச் சொல்வதாகவே அமைந்தது. நம் மனத்தில் தோன்றும் கருத்தின் அடிப்படையில் உணர்ச்சி தோன்றுவதும் அவ்வுணர்ச்சியோடு பொருந்திய கருத்தினை நாம் பிறருக்கு உணர்த்துவதே இலக்கியமாகும் (ஞானமூர்த்தி, 2011). அதுமட்டுமின்றி, தொன்மைக் காலந்தொட்டு அண்மைக் காலம் வரை அறக் கருத்துகளையும் ஒழுக்கநெறி உண்மைகளையும் உணர்ச்சியோடு உணர்த்தவல்ல இலக்கியங்களே உயர்தர இலக்கியமாகும் (ஞானமூர்த்தி, 2011). வாழ்க்கையிலிருந்து இலக்கியம் உருவாகின்றது; உருவானபின் பயில்வோர் உள்ளத்தே சில புதிய உணர்வுகளைத் தோற்றுவிக்கின்றது (பாலச்சந்திரன், 2012). பல இலக்கியவாதிகள் தங்களது அனுபவங்களைத் தனது தலைமுறையினருக்குத் தெரிவிக்கும் வகையில் இலக்கியங்களைப் படைத்துச் சென்றனர். சிறுகதை, நாவல், கவிதை, புதுக்கவிதை, மரபுக்கவிதை, கதை, நாடகம், பாடல் எனப் பல்வகையாக தங்களது அனுபவங்களைப் பதிவு செய்தனர். கவிதை நடை மிகவும் எளிய முறையில் மனித மனங்களைத் தழுவும் நிலை கொண்டது. கற்காலம் தொடங்கி மனிதன் அவனுள் ஏற்பட்ட அனுபவங்களை ஏதாவது ஒரு வகையில் பதிவு செய்துள்ளான் என்பதை வரலாற்று சான்றுகள் பகருகின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தமிழ் மொழியைப் பொறுத்த அளவில் மிகப் பழங்காலத்திலேயே தொல்காப்பியர் மனித மனத்தில் தோன்றும் உணர்ச்சிகளைக் கண்டறிந்து விளக்கியுள்ளார் (பாலச்சந்திரன், 2012). தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் ஆறாவதாக அமைந்திருப்பது மெய்ப்பாட்டியல். மெய்-உடம்பு, பாடு- படுதல், தோன்றுதல் எனப் பொருள்படும். அதாவது உள்ளத்து உணர்ச்சிகள் பிறருக்குப் புலனாகுமாறு புற உறுப்புகளில் தோன்றுதலே மெய்ப்பாடாகும். தொல்காப்பியர், ஒருவரின் மெய் வேறுபாடறிந்து மற்றவர் ஒழுக வேண்டிய திறப்பாடு பற்றியே மெய்ப்பாட்டியலை அமைத்துள்ளார். தொல்காப்பியர் தம் மெய்ப்பாட்டியலில் அகப்பொருளுக்கும், புறப்பொருளுக்கும் பொதுவாக உரிய உணர்ச்சிகளையும், அகப்பொருளுக்கே உரிய உணர்ச்சிகளையும் விளக்கியுள்ளார். ஒருவர் உள்ளத்தில் எழும் உணர்ச்சிகள், மற்றவர் கண்டும், கேட்டும் அறியப் புறவயக் குறியால் புலப்படுபவையே ‘மெய்ப்பாடு’ எனப்படும். ‘உய்ப்போன் செய்தது காண்போர்க்கு எய்துதல் மெய்ப்பாடு’. தொல்காப்பியர் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், வெகுளி, பெருமிதம், உவகை என எண்வகை மெய்ப்பாடுகளைக் கூறியுள்ளார் (இலக்குவனார், 2009).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தொல்காப்பியர் கூறியுள்ள எண்வகை மெய்ப்பாடு கவிஞர் அறிவுமதி கவிதைகளில் எவ்வகையில் கையாளப்பட்டுள்ளது என்பதை நுண்ணிய முறையில் ஆராயும் நோக்கத்தினைக் கொண்டே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. அதுமட்டுமின்றி, கவிஞர் அறிவுமதி கவிதைகளில் காணப்படும் மெய்ப்பாட்டின் காரணங்களைப் பகுத்தாய்ந்து அவரது கவிதைகளில் எண்வகை மெய்ப்பாட்டுக் கூறுகளின் ஒற்றுமையையும் அதன் மாறுபட்டிருக்கும் நிலைக்களன்களை ஆராயும் நோக்கிலே இவ்வாய்வு அமைந்துள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.3 ஆய்வுச் சிக்கல்

இலக்கியம் என்பது மனிதனின் தொடர்பு மொழியாடலாகவும் பயன்படுத்தப்படுகிறது. படைப்பாளிகள் தங்களது உள்ளுணர்வுகளை, அனுபவங்களைச் சமுதாயத்திற்கு ஏதாவது ஒரு வழியில் எடுத்துரைக்கவே கதை, சிறுகதை, நாவல், பாடல், கவிதை, நாடகம் எனப் பல்வகையான எழுத்துப்படிவங்களைப் படைத்தனர். கவிஞன் என்பவன் இவ்வுலகில் தன் உள்ளத்தைக் கவரும் காட்சியிலோ நிகழ்ச்சியிலோ ஆழ்ந்த உணர்ச்சிப் பெருக்குடையவனாகி, தன்னைக் கவர்ந்தவற்றை மரபுக்கவிதை, புதுக்கவிதை, ஐக்கூ கவிதை எனப் பல்வகையில் தங்களது உள்ளத்து உணர்ச்சிகளை வெளிக்கொணருகின்றனர். இன்றைய நவநாகரிக வாழ்க்கை முறையில், குடும்பப் பிரிவுகள், தனிக்குடும்ப வாழ்க்கை முறை, உறவுகளின் நெருக்கமின்மை, பொருளாதார ஏற்றதாழ்வு ஆகியவை இக்கால மக்களின் வாழ்வில் பெரும் மாற்றங்களை உருவாக்கியுள்ளன. அன்பு, காதல், பாசம், நேசம், பகிர்தல், புரிதல் ஆகியனவெல்லாம் குறைந்து, குடும்பங்களில் கேள்விக்குறிகளாக்கப்பட்டு, உன்னத உறவு நிலைகள் சிதறுண்டு போவதாய் குறிப்பிடுகிறார் (மீனா, 2012). கல்வி பயிலும் பருவத்தில் ஏற்படும் சிக்கல்கள் மாணவர்கள் மத்தியில் பெரும் சிக்கல்களையும் மனப்போராட்டத்தையும் ஏற்படுத்துகிறது. உணர்வு என்பது பொதுவான விஷயம். ஒரு தனிமனிதன் தான் ஒரு தவறான செயலில் ஈடுபடுவதற்கு அவனை உந்திச் செல்வது அவனது உள்ளத்து உணர்வுகளே ஆகும். உணர்வுகள் மனித வாழ்வில் பெரும் பங்கு வகிக்கின்றன. மனிதனின் உள்ளக்கிடங்கில் ஏற்படக்கூடிய உணர்வுகள் பல ஆக்கச் சக்திகளையும் அழிக்கும் சக்திகளுக்கும் வித்திடுகிறது. மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை அவனோடு பயணம் செய்வது

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


உணர்வு. ஒரு குழந்தை பூமியில் பிறக்கும் தருணத்தில் தன் முதல் மெய்ப்பாடான அழுகையை உடன் கொண்டு வருகின்றது. அதே வேளையில் ஒரு மனிதன் தன் வாழ்வின் கடைசிப் பயணமான இறப்பின் போதும், அவனது உறவினர்கள் தங்களது வருத்தத்தையும் பிரிவினையும் வெளிக்காட்ட அழுகையைப் பயன்படுத்துகின்றனர். மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை இந்த மெய்ப்பாடானது மனித வாழ்வில் தொடர்ந்து வெளிப்பட்டே வருகின்றது. ஒவ்வொரு தனிமனிதனும் தனக்குள் எழும் உணர்வுகளைச் சரியான முறையில் கையாளவும் ஆதிக்கம் செலுத்தவும் பழகிக் கொள்ளுதல் வேண்டும். மனிதனுள் எழும் உணர்வுகள், மனித மேம்பாட்டிற்கும் சமுதாய வளர்ச்சிக்கும் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. அவ்வாறு முறையாக்க் கையாளப்படாத உணர்வுகளால் இன்றைய தலைமுறையினர் பல்வகையில் மன அழுத்தத்திற்கு ஆளாகின்றனர். மன அழுத்தம் ஒருவரின் மன அமைதியை மட்டுமின்றி அவரது உடல் உள நலத்தையும் சீர்குலைக்கின்றது. இதன் காரணமாகவே இன்றைய தலைமுறையினர் பல தீய பழக்கங்களுக்கு ஆளாகின்றனர். இதற்கு அடிப்படை காரணமாக இருப்பது அவர்களது உணர்வுகளை நாம் சரிவரப் புரிந்து கொள்ளாமல் இருப்பதுதான். அவர்களது மெய்ப்பாடுகளை நாம் முறையான திசைக்குத் திருப்பாவிட்டால், நாம் பல சிக்கல்களை எதிர்நோக்கக்கூடும். இக்காலத் தலைமுறையினரிடையே மன அழுத்தத்தைக் குறைத்துப் பிறரையும் அவர்களது மன உணர்வுகளையும் புரிந்து கொண்டு செயல்படும் தன்னலமற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டும். இன்றைய தலைமுறையினர் எத்தன்மை கொண்ட உணர்வுகளை வெளிப்படுத்துகின்றனர் என்பதையும் அது நன்மையானதா அல்லது தீமையானதா என்பதை அறிந்து கொள்ள இயலாமல் இருப்பது ஆய்வுச் சிக்கலாகக் கொள்ளப்படுகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


கவிதை என்பது உணர்ச்சியின் பிரவாகம் (அறவாணன், 1959). கவிதைகள் மக்களுக்கு இலக்கியச் சுவையைத் தருவது. கவிதைகளுக்கு மக்களின் உணர்வுகளைத் தூண்டும் தன்மை உண்டு. கவிதைகள் செம்மையான சொற்கள், படிமங்கள் இவற்றைக் கொண்டு உருவாக்கப்படும் கவிதை தன் ஆதார அனுபவத்தை வாசகர் மனத்திற்குத் தளமாற்றம் செய்வதிலும் அதைத் தொடர்ந்து உணர்வுப்பூர்வமான விகசிப்பை ஏற்படுத்துவதிலும் வெற்றியடைய வேண்டும் (சிவகுமாரன், 2010). இச்சிறப்புகளைக் கவிஞர் அறிவுமதி கவிதைகளில் காண முடியும். கவிஞர் அறிவுமதி பல கவிதைத் தொகுப்புகளை எழுதியிருப்பினும், தனது நட்புக் காலம் எனும் கவிதைத் தொகுப்புகளின் வழியே மிகப் பிரசித்திப் பெற்றவராவார். சமுதாயச் சிக்கல், பெண்ணியம், சமுதாய விழுமியம், காதல், இயற்கை எனும் பல கருத்துகளை முன்வைத்தே படைப்பாற்றல் வெளிவந்து கொண்டிருந்த காலக்கட்டத்தில், கவிஞர் அறிவுமதி மட்டுமே ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான நட்பினை மிக நவநாகரிகமாக எடுத்துரைத்திருந்தார். இக்கவிதைகள் இளைய சமுதாயத்தினரிடையே பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியது. மனித வாழ்வின் இயல்பு நிலையினைத் தனது கவிதைகளில் புகுத்திப் பாமரரும் புரிந்துகொள்ளும் வண்ணம் அவரது கவிதைகள் மிக எளிய முறையில் அமைந்திருந்ததும் தனிச் சிறப்பாகும். கவிஞர் அறிவுமதி தனது கவிதைகளில் சமுதாயத்திற்குப் பல கருத்துகளையும் செய்திகளையும் கூறியுள்ளார். கவிதை இன்பத்தின் கொடுமுடியை உணர்வதற்கு மெய்ப்பாடுகளை அறிதல் மிகவும் இன்றியமையாதது (ஜெயஸ்ரீ, 2010). அறிவுமதி கவிதைகளில் எண்வகை மெய்ப்பாடு எனும் தலைப்பிலான இவ்வாய்வு சமுதாயத்தில் நிகழும் பல்வகையான நிகழ்வுகளின் உள்ளத்து உணர்ச்சிகளின் வெளிப்பாடாக அமைந்துள்ளது என்பதோடு மட்டுமின்றி மனிதனுக்குத் தேவையான பயன்மிக்க வாழ்க்கை நெறிமுறைகளையும் கற்றுத்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தரக்கூடிய வகையில் அமைந்துள்ளது என்பதை மெய்ப்பிக்கும் நோக்கில் ஆய்வாளர் இவ்வாய்வினைக் கையாண்டார்.

## 1.4 ஆய்வு நோக்கம்

மெய்ப்பாடுகள் மனித உள்ளத்து உணர்ச்சிகளின் வெளிப்பாடுகள். காலங்கள் மாறினாலும், மொழி, இனம், நாடு, எவற்றால் வேறுபட்டாலும் மனித மனம் வெளிப்படுத்தும் அடிப்படை உணர்ச்சிகள் மாறாமல் இருப்பது இயற்கை. அக்காலத்தில் பிறந்த ஒரு தனது முதல் மெய்ப்பாடான அழுகையை வெளிப்படுத்துகிறது. ஒரு மனிதனின் இறப்பு பிற மனிதர்களுக்கு அழுகையை வரவழைக்கின்றது. அன்றும் இன்றும் எந்த மாற்றமும் இன்றி இன்றுவரை இந்நிலை தொடர்கிறது. எனவேதான், கவிஞர் அறிவுமதியின் கவிதைகளை ஆய்வாளர் தொல்காப்பியரின் மெய்ப்பாட்டியல் கோட்பாட்டின் வழி ஆய்வு செய்துள்ளார். ஒருவரின் மனக்குறிப்பின் வழி அவர்தம் முகம் வேறுபடுதலும் மொழி வேறுபடுதலும் என்பதால், அவ்வேறுபாடுகளை முறையே கண்ணாலும் செவியாலும் உணர்ந்து கொள்ளக்கூடும் என்பதை மெய்ப்பாட்டியல் தெளிவுப்படுத்துகின்றது (இளம்பூரணார், 2014). எனவே, கவிஞர் அறிவுமதியின் கவிதைகளில் காணப்படும் எண்வகை மெய்ப்பாட்டினை ஆய்வு செய்யும் வகையில் ஆய்வாளர் சில நோக்கங்களைக் கொண்டுள்ளார். அவை பின்வருமாறு :

1. அறிவுமதி கவிதைகளில் காணப்படும் எண்வகை மெய்ப்பாட்டுக் கூறுகளை அடையாளம் காணுதல்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


2. அறிவுமதி கவிதைகளில் வெளிப்படும் மெய்ப்பாட்டு உணர்வுகளுக்கான நிலைக்களன்களும் தொல்காப்பியர் கூறும் மெய்ப்பாட்டு நிலைக்களன்களும் கொண்டிருக்கும் ஒற்றுமையை ஆராய்தல்.

3. அறிவுமதி கவிதைகளில் தொல்காப்பியர் கூறும் மெய்ப்பாட்டு நிலைக்களன்களோடு மாறுபட்டிருக்கும் நிலைக்களன்களைக் நிறுவுதல்.

## 1.5 ஆய்வு வினா

இந்த ஆய்வு சில ஆய்வு வினாக்களைக் கொண்டிருக்கிறது. அவை பின்வருமாறு :

1. அறிவுமதி கவிதைகளில் காணப்படும் மெய்ப்பாட்டுக் கூறுகள் யாவை?
2. அறிவுமதி கவிதைகளில் வெளிப்படும் மெய்ப்பாட்டு உணர்வுக்கான நிலைக்களன்களும் தொல்காப்பியர் கூறும் மெய்ப்பாட்டு நிலைக்களன்களும் கொண்டிருக்கும் ஒற்றுமை யாவை?
3. அறிவுமதி கவிதைகளில் தொல்காப்பியர் கூறும் மெய்ப்பாட்டு நிலைக்களன்களோடு மாறுபட்டிருக்கும் நிலைக்களன்கள் யாவை?

05-4506832 pustaka.upsi.edu.my Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.6 ஆய்வு நன்மைகள்

ஒவ்வொரு ஆய்வும் ஒவ்வொரு தனி நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படுகின்றது. மனித சமுதாயத்தை ஆட்டிப் படைப்பது அறிவும் உணர்ச்சியும்தான். உலகம் தோன்றிய நாளிலிருந்து, உலகம் அழியும் நாள் வரை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இருப்பவை அறிவும் உணர்ச்சியும். உணர்ச்சியை அமைதிப்படுத்துவது அறிவு என்கிறார் வள்ளுவர்,

*சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ*
*நன்றின்பால் உய்ப்ப தறிவு* - குறள் 422

மன உணர்வின் வெளிப்பாடுகளே மெய்ப்பாடுகள். அவை உலக மனிதர் அனைவருக்கும் பொருந்தும் உணர்ச்சிகள் ஆகும். மனிதர்கள் மகிழ்ச்சி ஏற்படும் போது சிரிக்கின்றனர். துன்பம் ஏற்படும் போது அழுகின்றனர். சில செயல்களை நினைக்கும் போது அருவருப்பு அடைகின்றனர். மனிதன் சந்திரனின் கால் வைக்கும் போது வியக்கின்றனர். பாம்புகளைக் கண்டால் அஞ்சுகின்றனர். பிறர் தவறு செய்யும் போது சினக்கின்றனர். நல்லவை நடக்கும் போது மகிழ்ச்சி அடைகின்றனர் (ஜெயஸ்ரீ, 2010). இவ்வாறு மனிதத்திற்குரிய மெய்ப்பாடுகள் பற்றி பேசுவது மெய்ப்பாட்டியல். இந்த மெய்ப்பாட்டியல் என்பது உலக மாந்தர் அனைவருக்கும் பொருந்தும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தொல்காப்பியரின் சிறப்புமிக்க இம்மெய்ப்பாட்டியலை ஒட்டிய இந்த ஆய்வு *அறிவுமதி கவிதைகளில் எண்வகை மெய்ப்பாட்டுக் கூறுகள்* எனும் தலைப்பில் ஆராயப்பட்டுள்ளது. இவ்வாய்வு தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அமைந்துள்ள மெய்ப்பாட்டியல் கோட்பாடு எவ்வகையில் தற்காலத் தமிழ் இலக்கியமான கவிதைகளில் வெளிப்படுகின்றது என்பதைக் கண்டறிய துணைபுரிந்தது. தமிழ் இலக்கியவாதிகளையும் அவர்களது தமிழ் இலக்கியத்தின் சிறப்புகளையும் அறிந்துகொள்ள வகை செய்தது. தொல்காப்பியம் காட்டும் மெய்ப்பாட்டுக் கூறுகளைப் பற்றிய தெளிவு பிற ஆய்வாளர்களுக்கு ஏற்படுவதுடன் அதனை வேறு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பல கோணங்களில் ஆராயவும் வழிகாட்டியாக அமையும். அதுமட்டுமின்றி, இவ்வாய்வானது எதிர்காலத் தொடர் ஆய்விற்கும் ஆய்வாளர்களுக்கும் ஒரு முன்னோடியாக அமையும். கவிதைகளில் காணப்படும் சொற்பயன்பாடு எத்தகைய உணர்வுகளை வெளிப்படுத்துகிறது போன்ற தகவல்களையும் அறிய துணைபுரியும். “சிந்தனையையும், மனக்கவலையையும் குறைத்தல், மன எழுச்சிகளை ஒழுங்குபடுத்துதல், வெளிப்படையாகப் போதிக்காமல்- ஆனால் மனப்போராட்டப் பிரச்சனைகளின் நல்ல முடிவுகளை உணர்த்துதல், மனோநிலையைக் குழப்பமின்றி வைத்திருத்தல் போன்றவை உண்மைக் கவிதையின் பயன்” என்று சொல்லப்படுவதாகக் குறிப்பிடுகிறார் (சிவகுமாரன், 2010). அதே வேளையில், மனிதன் உணர்ச்சிவசப்பட்டு அறிவிழக்கும் காரணங்களை அறிந்து அவற்றைக் களைவதற்கும் துணைபுரிவதாய் அமையும். சமூகத்தில் ஏற்படும் பல அவலங்களையும் தனது உள்ளத்து உணர்ச்சிகளைக் கண்டறிந்து செயல்படுத்தாத நிலையினைத் தவிர்க்கவும் வழிகோலும். இன்றைய தலைமுறையினரின் மனப்போராட்டங்களை அறிந்து அவற்றைக் களையும் முறையைக் கண்டறியவும் இவ்வாய்வு துணைபுரியும்.

## 1.7 ஆய்வு எல்லை

ஆய்வாளர் ஆய்வின் எல்லையை வரையறுத்துள்ளார். இந்த ஆய்வானது அறிவுமதியின் படைப்பில் வெளியான அனைத்துக் கவிதைப் படைப்புகளையும் உட்படுத்தியுள்ளதாய் அமைந்தது. 1977 முதல் 2015 ஆம் ஆண்டு வரையில் அவர் எழுதி, புத்தக வடிவில் வெளிவந்துள்ள கவிதைப் புத்தகங்கள் அனைத்தும் இவ்வாய்விற்குப் பயன்படுத்தப்பட்டன. அவரது படைப்பில் இதுவரையில் மொத்தம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


13 கவிதைப் புத்தகங்கள் வெளிவந்துள்ளன. அவிழரும்பு, என் பிரிய வசந்தமே, நிரந்தர மனிதர்கள், அன்பான ராட்சசிக்கு, புல்லின் நுனியில் பனித்துளி, அணுத்திமிர் அடக்கு, ஆயுளின் அந்தி வரை, கடைசி மழைத் துளி, நட்புக்காலம், மணிமுத்தா ஆற்றங்கரையில், பாட்டரங்கக் கவிதைகள், வலி மற்றும் மழைப்பேச்சு ஆகிய கவிதை நூல்கள் இவ்வாய்விற்குப் பயன்படுத்தப்பட்டன.

**அட்டவணை 1**

***அறிவுமதியின் கவிதை நூல்கள்***

| எண் | பெயர் | எழுத்தாளர் | ஆண்டு |
|---|---|---|---|
| 1 | அவிழரும்பு | கவிஞர் அறிவுமதி | 1999 |
| 2 | என் பிரிய வசந்தமே | கவிஞர் அறிவுமதி | 1977 |
| 3 | நிரந்தர மனிதர்கள் | கவிஞர் அறிவுமதி | 1982 |
| 4 | அன்பான ராட்சசிக்கு | கவிஞர் அறிவுமதி | 1978 |
| 5 | புல்லின் நுனியில் பனித்துளி | கவிஞர் அறிவுமதி | 1984 |
| 6 | அணுத்திமிர் அடக்கு | கவிஞர் அறிவுமதி | 1990 |
| 7 | ஆயுளின் அந்தி வரை | கவிஞர் அறிவுமதி | 1990, 2015 |
| 8 | கடைசி மழைத்துளி | கவிஞர் அறிவுமதி | 1996, 2001 |
| 9 | நட்புக் காலம் | கவிஞர் அறிவுமதி | 2000, 2014 |
| 10 | மணிமுத்தா ஆற்றங்கரையில் | கவிஞர் அறிவுமதி | 1999 |
| 11 | பாட்டரங்கக் கவிதைகள் | கவிஞர் அறிவுமதி | 1990 |
| 12 | வலி | கவிஞர் அறிவுமதி | 2006 |
| 13 | மழைப்பேச்சு | கவிஞர் அறிவுமதி | 2011 |

## 1.8 ஆய்வுச் சான்றாதாரங்கள்

இந்த ஆய்வு இரண்டு வகையான சான்றாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வாளர் இவ்வாய்விற்காக முதன்மைச் சான்றாதாரமாக அறிவுமதியின் கவிதை நூல்களைப் பயன்படுத்தினார். அதனையடுத்து, துணைச்சான்றாதாரங்களாக, பிற பதிப்பு ஏடுகளையும் நூல் ஆய்வினையும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


மேற்கொண்டார். 1977 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலான கவிஞர் அறிவுமதியின் கவிதை நூல்கள் முதன்மைச் சான்றாதாரமாகப் பயன்படுத்தப்பட்டது. அதே சமயம், துணைச் சான்றாதாரங்களாக ஆய்வேடுகள், ஆய்வுக்கட்டுரைகள், ஆய்வடங்கல், புத்தகங்கள், இணையக்கட்டுரைகள் ஆகியவை இவ்வாய்விற்குப் பயன்படுத்தப்பட்டன.

## 1.9 கலைச்சொல் விளக்கம்

இந்த ஆய்வின் உள்ளடக்கத்தைப் படிப்பவர் தெளிவாகப் புரிந்து கொள்ள ஏதுவாக அமைய ஆய்வாளர் இந்த ஆய்வில் பயன்படுத்தி உள்ள சில குறிப்பிட்ட கலைச்சொற்களுக்கு மிகத் துல்லியமான விளக்கத்தினை இங்கு குறிப்பிட்டுள்ளார். இந்தக் கலைச்சொற்களின் பயன்பாடே இவ்வாய்வில் இடம்பெற்றுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.9.1 கவிதை

கவிதை என்பது உரைப்பது கிடையாது; உணர்த்துவது (கோபி, 2009). தாம் காணும் குருவி, காக்கை முதலிய எல்லாவற்றினுடைய உணர்ச்சிகளிலும் ஒன்றிப்போகும் உள்ளம் கலைஞர்க்கு இயற்கையாக உள்ளது. அந்த ஒன்றிய உள்ளத்தோடு அவர்கள் கலையைப் படைப்பதால்தான், அவர்கள் படைக்கும் கலையில் நாம் அவர்களின் உணர்ச்சியைக் காண முடிகிறது என்று மு.வ கூறுவதாகக் (கோபி, 2009) குறிப்பிடுகிறார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அறிவின் உதவிக்குக் கற்பனையைத் துணையாகக் கொண்டு உண்மையை மகிழ்ச்சியூட்டும் வண்ணம் கலந்து வழங்கும் கலை கவிதையாகும். சிந்தனையிலும் சொற்களிலும் உணர்வு பொங்கித் ததும்புவது கவிதை (பாலச்சந்திரன், 2012). கவிதை என்பது ஒரு கருத்தல்ல. அது குருதி வடியும் காயத்திலிருந்தும், அல்லது அழகு அரும்பும் புன்னகையிலிருந்தும் பிறப்பது. கவிஞன் தன் எழுதுகோலைத் தன் இதயத்தில் தோய்த்து எழுதுவதே கவிதை (நளினி, 2012). கவிதை உலகமே தனி உலகம்; அறிவு அனைத்தையும் தன்னுள்ளே கொண்டது கவிதை உலகம், உலக அறிவின் மையமும் வெளிவட்டமும் கவிதை காந்தம்தான் (கைலாசபதி, 2007).

நமக்குள்ளிருக்கும் கனவுகளையும் எதார்த்தங்களையும் எப்போதும் இணைக்க மேற்கொள்ளும் முயற்சிதான் கவிதை என்றும் அறிவியல் அறிஞர் நுண்ணியப் பொருட்களில் புதியதைக் கண்டு பிடிப்பது போல் கலைஞர்கள் உணர்வுகளில் புதியனவற்றைக் கண்டுபிடிப்பவர்கள் (மீனா, 2012).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கரடு முரடான ஒரு மரத்தின் இளம் தளிர் போலவும், மனித உடலின் மிக மென்மையான உறுப்புகளில் ஒன்றாகிய இதயம் போலவும், நீண்ட காலம் பண்பட்டு வளர்ந்த இசை மரபின் வண்ணம் போலவும் இலக்கியக் கலையின் மிகப் பண்பட்ட ஒரு வடிவமாகக் கவிதை விளங்குகிறது (பாலச்சந்திரன், 2012).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



கவிதை என்பது மிகப் பழமை வாய்ந்த இலக்கிய வடிவம். எந்தப் பொருளையும் கவிதையாக்கலாம். ஒன்றை அறிவிப்பதன்று கவிஞனின் நோக்கம், ஒன்றை உணர்த்துவதே எனக் குறிப்பிடுகிறார் (சிவகுமாரன், 2010).

### 1.9.2 மெய்ப்பாடு

பேச்சு மொழி தோற்றத்திற்கு முன்பே மனிதன் தன் உள்ளத்து உணர்ச்சிகளைத் தன் உடலசைவுகளால் வெளிப்படுத்தினான். உள்ளத்து உணர்ச்சிகளின் வெளிப்பாடாகத் தோன்றும் புறக்குறிகள் மெய்ப்பாடுகள் எனப்படும் (முரளி, 2015).

கவிதைகளில் கவிஞனின் உள்ளத்துணர்ச்சி இயல்பாகப் படிகின்றது. அவனது உணர்ச்சியை, கவிதையைப் படிப்போருக்குப் புலப்படுத்துதல் வேண்டும். கவிதைகளில் வெளிப்படும் கவிஞனின் உணர்ச்சி வெளிப்பாட்டை மெய்ப்பாடு எனலாம். மெய்ப்பாடு என்பது மெல்லியலார் மனத்தத்துவத்தை நன்கு தெரிவிக்கும் பகுதி (முரளி, 2015).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தொல்காப்பியம் எனும் நூல் எழுத்து, சொல், பொருள் என்று மூன்று அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தில் ஒன்பது இயல்கள் இடம் பெற்றுள்ளன. அகத்திணை இயல், காதல், கற்பு இயல், பொருளியல், புறத்திணை இயல், மெய்ப்பாட்டு, உவம இயல், மரபியல் செய்யுள் இயல் என்பவையாகும். அவ்வியலில் ஒன்றுதான் மெய்ப்பாட்டியல். மாந்தரின் மன உணர்வுகளை வெளிப்படுத்தும் நிலையினையே தொல்காப்பியர் மெய்ப்பாட்டு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இயலில் எடுத்தியம்பியுள்ளார். உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிக்கேற்ப உடலில் தோன்றும் வேறுபாடு என்பதுதான் மெய்ப்பாடு. மெய்ப்பாட்டின் இயல்பைத் தொல்காப்பியனார்,

> உய்த்துணர் வின்றித் தலைவரு பொருண்மையின்
> மெய்ப்பட முடிப்பது மெய்ப்பாடாகும் (தொல்.பொ.505)

எனக் கூறுகிறார். அதாவது உணர்ச்சி மெய்யில் (புற உடலில்) வெளிப்படுதல் மெய்ப்பாடு ஆகும். தொல்காப்பியம் காட்டும் மெய்ப்பாடுகள் எட்டு. அவையாவன: நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை ஆகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தொல்காப்பியர் உணர்ச்சிகளை மெய்ப்பாட்டியலில் வகைப்படுத்தியுள்ளார். ஒருவன் உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சியானது பிறர் காணும் வண்ணம் அவன் உடம்பின்கண் வெளிப்படுதல் மெய்ப்பாடாகும். ‘உய்ப்போன் செய்தது காண்போர்க்கு எய்துதல் மெய்ப்பாடு’ (ஈஸ்வரன், 2014).

‘‘மெய்ப்பாடு என்பது பொருட்பாடு; அஃதாவது உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோராற்றான் வெளிப்படுதல்’’ என்பதாகும் என்கிறார் (இலக்குவனார், 2009).

உள்ளக் குறிப்பும் உடலில் தோன்றும் வேறுபாடும் கூடிய வழியே மெய்ப்பாடு தோன்றுகின்றது (இலக்குவனார், 2009).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


''நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை யென்று
அப்பா லெட்டே மெய்ப்பா டென்ப'' -
(பொருளதிகாரம்-மெய்ப்பாட்டியல் 247)

இந்த எட்டு மெய்ப்பாடுகளும் ஒவ்வொன்றும் நான்கு வகைப்படும்.

**அட்டவணை 2**

***எண்வகை மெய்ப்பாடுகளும் அவற்றிற்குரிய நிலைக்களன்களும்.***

| **மெய்ப்பாடு** | | **நிலைக்களன்** | | | |
|---|---|---|---|---|---|
| நகை<br>இகழ்ச்சியில் பிறப்பது | > | எள்ளல் | இளமை | பேதமை | மடன் |
| அழுகை<br>அவலத்தில் பிறப்பது | > | இளிவு | இழவு | அசைவு | வறுமை |
| இளிவரல்<br>இழிப்பில் பிறப்பது | > | மூப்பு | பிணி | வருத்தம் | மென்மை |
| மருட்கை<br>வியப்பால்<br>தோன்றுவது | > | புதுமை | பெருமை | சிறுமை | ஆக்கம் |
| அச்சம்<br>பிறராலும் / பிற பொருளாளும்<br>தோன்றுவது | > | அணங்கு | விலங்கு | கள்வர் | இறை |
| பெருமிதம்<br>இசைமை | > | கல்வி | தறுகண் | இசைமை | கொடை |
| வெகுளி<br>வெறுப்பினால்<br>பிறப்பது | > | உறுப்பறை | குடிக்கோள் | அலை | கொலை |
| உவகை<br>மகிழ்ச்சி / காமம்<br>முதலியனவற்றால்<br>தோன்றுவது | > | செல்வம் | புலன் | புணர்வு | விளையாட்டு |

இவை முப்பத்திரெண்டும் எண்வகை மெய்ப்பாடுகள் தோன்றுவதற்குரிய நிலைக்களன்கள் ஆகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.10 தொகுப்புரை

இவ்வியலின் தொகுப்பாக ஆய்வாளர், கவிதைகளின் தன்மைகளையும் அதன் சிறப்புகளையும் எடுத்துரைத்துள்ளார். மேலும், தொல்காப்பியத்தில் பொருளதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மெய்ப்பாட்டியல் கூறுகளையும் இவ்வியலில் விளக்கியுள்ளார். மெய்ப்பாட்டியல் எனும் கோட்பாட்டினைத் தமிழ் இலக்கிய வகையான கவிதைகளில் கண்டறியும் முறையினையும் அதன் நன்மைகளையும் விளக்கியுள்ளார். மனிதன் தனது உள்ளத்து உணர்வுகளைச் சரியான முறையில் வெளிப்படுத்தக்கூடியவனாக இருக்க கற்றுக்கொண்டால், தனக்குள்ளும் தன்னைச் சுற்றியுள்ளவர்களிடமும், நன்முறையில் நடந்துகொள்வதோடு மட்டுமின்றி, சமூகத்தில் நடக்கக்கூடிய பல்வேறு பிரச்சனைகளைச் சுமூகமான முறையில் கையாள முடியும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi